யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, யூன் - 2016
Term Examination, June - 2016

FWC

தரம் :- 13 (2016)	கணக்கீடு – II	மூன்று மணித்தியாலங்கள்

அறிவுறுத்தல்கள்:-

- முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஆறு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒவ்வொரு விடையும் புதிய தாளில் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.
- ஒவ்வொரு பொருத்தமான செய்முறைகள் விடைகளுடன் இணைக்கப்படல் வேண்டும்.

01) (அ) வரையறுக்கப்பட்ட பொன்சேகா பொதுக்கம்பனியின் 2016.03.31 ஆந் திகதி உள்ளவாறான பரீட்சை மீதியில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

ரூபா 000

விபரம்	வரவு	செலவு
கொள்வனவு	9,000	
உள் வருகைக்கூலி	1,500	
விற்பனை		22,300
2015.04.01 அன்று இருப்பு	2,400	
மோட்டார் வாகன பராமரிப்புச் செலவு	321	
காப்புறுதி	960	
செலுத்திய வருமான வரி 2014 / 2015	400	
2015 / 2016	500	
வரி வேறாக்கம் 2014 / 2015 இற்காக		600
10% நிலையான வைப்பு	1,500	
பணியாளர் வேதனம்	1,869	
பணிப்பாளர் வேதனம்	1,450	
விளம்பரக் கட்டணம்	1,800	
கணக்காய்வுக் கட்டணம்	1,000	
கிடைத்த நிலையான வைப்பு வட்டி		75
கடன்பட்டோர்	2,100	
கடன்கொடுத்தோர்		14,000
கிடைத்த கழிவு		200
15% நீண்டகால வங்கிக்கடன்		840
ஐயக்கடன் வேறாக்கம் 2015.04.01		70
தளபாடங்கள் (கிரயம்)	7,500	
மோட்டார் வாகனம் (கிரயம்)	17,500	
காணி (கிரயம்)	25,000	

2016.03.31 அன்று முடிவடைந்த ஆண்டுக்குரிய நிதி அறிக்கைகளைத் தயாரிக்க முன்னர் பின்வரும் சீராக்கங்களைச் செய்தல் வேண்டும்.

(அ) 2016.03.31 அன்று கையிருப்பின் கிரயம் ரூபாய் 5,100,000 ஆவதோடு, அத்தினத்தின் அதன் தேறிய, தேறத்தக்க பெறுமானம் ரூபாய் 4,800,000 ஆகும்.

(ஆ) 2016.03.31 அன்று ரூபாய் 500,000 செலுத்த வேண்டியுள்ள கடன்பட்டோர் ஒருவர் முறிவடைந்துள்ளமை இனங்காணப்பட்டதோடு ஏனைய கடன்பட்டோரிடமிருந்து 5% ஐயக்கடன் ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

(இ) 15% வங்கிக்கடன் 2015.08.01 அன்று பெறப்பட்டுள்ளதோடு, கடன் வட்டி தொடர்பாக எவ்வித பதிவுகளும் வைக்கப்படவில்லை.

(ஈ) 2014/2015 கணக்கு ஆண்டுக்காக வருமான வரிப் பொறுப்பு ரூபாய் 400,000 இற்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதோடு 2015/2016 ஆண்டுக்காக வருமான வரி ரூபாய் 600,000 இற்கு மதிப்பிடப்பட்டுள்ளது.

(உ) ஆதனப் பொறித் தொகுதியும் உபகரணங்களும் எளிய வழிமுறையில் பின்வருமாறு ஆண்டு ரீதியில் தேய்வுறுத்தப்படும்.

தளபாடங்கள் 5%

மோட்டார் வாகன தேய்வு 10%

(ஊ) தொழில் ரீதியான மதிப்பீட்டாளர் ஒருவரினால் வணிகத்தின் காணிகள் ரூபாய் 26,800,000 இற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
அதனை அறிக்கைப்படுத்தல் வேண்டும்.

தேவைப்படுவது,

- 2016.03.31 அன்று முடிவடைந்த ஆண்டுக்குரிய முற்றடக்கிய வருமானக்கூற்று

(8 புள்ளிகள்)

(ஆ) வரையறுக்கப்பட்ட விராட் பொதுக்கம்பனியின் 2015.03.31 அன்று பேரேட்டிலிருந்து பெயர்த் தெடுக்கப்பட்ட மீதிகள் வருமாறு :

	(ரூபாய் 000)
சாதாரணப் பங்குகள் மூலதனம்	40,000
தேர்வுப் பங்குகள் மூலதனம்	15,000
பொது ஒதுக்கு	5,000
நிறுத்தி வைத்த இலாபம்	2,500

2016.04.01 அன்று கம்பனியின் முகாமைச் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

1. பொது ஒதுக்குக்கு ரூபாய் 1,000,000 ஐ மாற்றுதல்.
2. ரூபாய் 1,500,000 பொது ஒதுக்கை மூலதனமாக்குதல்.
3. ரூபாய் 50 வீதம் சாதாரண பங்குகள் 10,000 ஐ உரிமை வழங்கீடு செய்தல்.
4. ரூபாய் 50 வீதம் தேர்வுப் பங்குகள் 5,000 வெளியிடல்.
5. ரூபாய் 50,000 வீதம் தேர்வுப் பங்குகளுக்கான இடைக்கால பங்கு இலாபத்தை பங்கு உரிமையாளருக்குச் செலுத்துதல்.
6. தேர்வுப் பங்கு உரிமையாளருக்கு மீதி இலாபப் பங்காகிய ரூபாய் 150,000 செலுத்தப் பிரேரித்தல்.
7. காலப்பகுதியின் விரிவான தொடக்க வருமானம் ரூ 3,200 ஆகும். அதில் கட்டட மறுமதிப்பீட்டு இலாபம் ரூபாய் 200 உம் அடங்கியுள்ளது.

தேவைப்படுவது :

(அ) உரித்து மாற்றக் கூற்றைத் தருக.

(ஆ) உரித்து மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தாத உருப்படிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(இ) 2016.03.31 தினத்தன்று நிதிநிலைமைக்கூற்றில் பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகள்

(4 புள்ளிகள்)

(இ) வரையறுக்கப்பட்ட சேனுகா பொதுக் கம்பனிக்கு ஆட்சேர்க்கப்பட்ட கணக்கீட்டு எழுது வினைஞரால் அனுமதிக்காகப் பணிப்பாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்று வருமாறு,

வரையறுக்கப்பட்ட சேனுகா பொதுக்கம்பனி

2016.03.31 அன்று முடிவடைந்த ஆண்டுக்குரிய நிதிநிலைமைக்கூற்று (ரூபாய் 000)

சொத்துக்கள்		உரித்துக்கள்	
ஆதன, பொறித்தொகுதிக் கிரயம்	8,400	**வெளிப்படுத்திய மூலதனம்**	
ஆதன பொறித்தொகுதித் தேய்வு வேறாக்கம்	(650)	பொதுப் பங்குகள்	3,700
	7,750	தேர்வுப் பங்குகள்	2,500
நிலையான வைப்புக்கள் 20%	1,600	பொது ஒதுக்கீடு	2,280
காசும் காசுக்குச் சமனானவையும்	1,200	மீள்மதிப்பீடு ஒதுக்கீடு	1,030
பண்ட இருப்பு	800	பற்றி வைத்த இலாபம்	1,170
வியாபார கிடைக்க வேண்டியவை	550		
	11,900		
கழி- பொறுப்புக்கள்			
வியாபாரத்தால் செலுத்த வேண்டியவை	150		
அட்டுறு செலவுகள்	120		
உத்தேசத் தேர்வு இலாபப் பங்கு	150		
வங்கிக்கடன் 18%	800		
	(1,220)		
தேறிய தொழிற்படு மூலதனம்	10,680		10,680

ஏனைய தகவல்கள்

ஆதன, பொறித்தொகுதி, உபகரணக் கட்டமைப்பு வருமாறு,

(ரூபா 000)

	கிரய / மீள்மதிப்பீட்டுப் பெறுமானம்	திரண்ட தேய்வு
காணி கட்டிடம்	2,500	250
மோட்டார் வாகனம்	2,400	100
பொறிகள்	2,000	150
கணனி முறைமை	1,500	150
	8,400	650

- திரண்ட தேய்வில் பின்வரும் ஆண்டுத் தேய்வுகளும் அடங்கும். (ரூபாய் 000)
  கட்டடங்கள் 50
  மோட்டார் வாகனங்கள் 20
  கணினி 40
  பொறிகள் 50
- காணியின் மீள்மதிப்பீட்டுப் பெறுமானம் ரூபாய் 1500
  அதன் கிரயம் ரூபாய் 1400 ஆக இருந்தது.

தேவைப்படுவது

✶ $LKAS - 01$ - நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலும், முன்வைத்தலும் நியமத்தின் படி பங்குதாரர்களுக்குச் சமர்ப்பிப்பதற்காகத் தேவையான வெளிப்படுத்தல்களைக் கொண்ட நிதிநிலைமைக் கூற்றைத் தயாரித்தல்.

(8 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02) (அ) கோதை, பாவை, ஆண்டாள் ஆகியோர் இலாப நட்டங்களை 4 : 3 : 3 என்ற விகிதத்தில் பகிரும் பங்காளர்கள் ஆவார். 31.03.2015 இல் உள்ளபடியான பங்குடமையின் நிதிநிலைமைக்கூற்று பின்வருமாறு

(ரூபாய் 000)

நடைமுறையல்லாச் சொத்துக்கள்		
ஆதனம் மற்றும் பொறி உபகரணம் - கிரயத்தில்	2000	
திரண்ட பெறுமானத்தேய்வு	(400)	1600
நடைமுறைச் சொத்துக்கள்		
சரக்கிருப்பு	300	
வியாபாரக் கடன்பட்டோர்	600	
காசு	120	1020
		2620
மூலதனக் கணக்குகள்		
கோதை	600	
பாவை	400	
ஆண்டாள்	300	1300
நடைமுறைக் கணக்கு		
கோதை	160	
பாவை	100	
ஆண்டாள்	40	300
நடைமுறையல்லாத பொறுப்பு		
பாவைகடன்		400
நடைமுறைப்பொறுப்பு		
கடன்கொடுத்தோர்		620
		2620

மேலதிக தகவல்கள் :-

i) 01.04.2015 இல் ஆண்டாள் பங்குடமையில் இருந்து இளைப்பாறினார் ஆண்டாளிற்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகையைக் கடனாகக் கருதுவதற்கும் அதற்கு 5% வருடாந்த வட்டி செலுத்துவதற்கும் உடன்பட்டுக்கொள்ளப்பட்டது. இத்தினத்தில் பங்குடமையின் நன்மதிப்பு ரூபா 1,600,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான சகல சீராக்கங்களும் பங்காளர் மூலதனக் கணக்கினூடாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ii) பங்காளர் கோதை, பாவை பின்வரும் நிபந்தனையின் கீழ் பங்குடமையைத் தொடர உடன்பட்டனர்.

அ) ஒவ்வொரு பங்காளரும் வருடாந்த சம்பளமாக ரூபா 140,000 பெற உரித்துடையவர்கள்.

ஆ) இலாப நட்டங்கள் சமமாகப் பகிரப்படல் வேண்டும்.

iii) இக்காலத்தில் பங்காளர் கோதை, பாவை முறையே ரூபா 120,000, ரூபா 100,000 தொகைகளைக் காசாகப் பற்றி இருந்தனர்.

iv) பங்குடமையின் சகல விற்பனைகளும், கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப் படுகின்றது.

இவ்வாண்டில் கடன்பட்டோரிடமிருந்து ரூபா 1,900,000 பெறப்பட்டுள்ளதுடன், கடன் கொடுத்தோருக்கு ரூபா 800,000 செலுத்தப்பட்டுள்ளது.

v) இவ்வாண்டில் செலுத்தப்பட்ட செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 275,000.

vi) கடன்கள் மீதான வட்டி செலுத்தப்படல் வேண்டும்.

vii) அதனம் மற்றும் பொறி உபகரணத்தின் மீது நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்விடல் வேண்டும்.

viii) 31.03.2016 இல் உள்ளபடியான பங்குடமையின் நடைமுறைச் சொத்துக்களும், நடைமுறைப் பொறுப்புக்களும் பின்வருமாறு

	(ரூபா 000)
சரக்கிருப்பு	300
வியாபாரக் கடன்பட்டோர்	500
காசு	300
வியாபாரக் கடன்கொடுத்தோர்	400

வேண்டப்படுவது :-

கோதை, பாவை பங்குடமையிற் பின்வரும் நிதி அறிக்கைகள்

1) 31.03.2016 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று (பங்காளருக்கான பகிர்வுகள் உட்பட)
2) 31.03.2016 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்காளர் மூலதனக் கணக்குகள், நடைமுறைக்கணக்குகள்
3) 01.04.2015 இல் உள்ளவாறான ஆண்டாளின் கடன் கணக்கு

(10 புள்ளிகள்)

(ஆ) காலணி உற்பத்தியில் ஈடுபடும் கம்பனி ஒன்று இரண்டு உற்பத்தித் திணைக்களங்களையும், ஒரு சேவைத் திணைக்களத்தையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு திணைக்களத்திற்கும் ஒதுக்கிய மேந்தலைகளும் ஏனைய தரவுகளும் வருமாறு

	உற்பத்தித் திணைக்களம் (1)	உற்பத்தித் திணைக்களம் (2)	சேவைத் திணைக்களம்
நேரில் பொருட்கள் (ரூபா)	27,000	18,000	12,000
நேரில் கூலி (ரூபா)	31,500	22,500	13,500
நேரில் செலவுகள் (ரூபா)	31,500	6,000	3,000
பாதிடப்பட்ட இயந்திர மணித்தியாலம்	6,805	5,395	–
பாதிடப்பட்ட நேர் ஊழிய மணித்தியாலம்	3,742	1,058	–
கட்டளைகளின் எண்ணிக்கை	45	30	–
பாவனை இயந்திரப் பெறுமதி (ரூபா)	720,000	480,000	–
தளப்பரப்பு (சதுரமீற்றர்)	100,000	50,000	100,000
வேலையாட்கள் எண்ணிக்கை	40	30	30

பகிர்வு செய்யப்படாத மேந்தலைகள்

வாடகை இறை	ரூபா 60,000
இயந்திர பெறுமானத்தேய்வு	ரூபா 50,000
ஊழியர் நலன் பேணல்	ரூபா 20,000

உற்பத்தித் திணைக்களம் (1), உற்பத்தித் திணைக்களம் (2) இரண்டு வகையான ஆண்கள் காலணி, பெண்கள் காலணி உற்பத்தியில் ஈடுபடுகின்றன. அவற்றுக்கான பகுப்பாய்வு வருமாறு

	ஆண்கள் காலணி	பெண்கள் காலணி
அலகொன்றுக்கான நேர் மூலப்பொருள் (ரூபா)	300	180
அலகொன்றுக்கான நேர் கூலியும் நேர் செலவும் (ரூபா)	165	135
அலகுக்குத் தேவைப்படும் நேர் ஊழிய மணித்தியாலம்	3	2
அலகுக்குத் தேவைப்படும் இயந்திர மணித்தியாலம்	2	3

- சேவைத் திணைக்களத்தினது மேந்தலைகள் உற்பத்தித் திணைக்களங்களுக்கிடையில் கட்டளைகளின் எண்ணிக்கை அடிப்படையில் மீள் பகிர்வு செய்தல்.
- உற்பத்தித் திணைக்களம் (1) இனது மேந்தலை உறிஞ்சுதல் வீதம் நேர் ஊழிய மணித்தியால அடிப்படையாகும். உற்பத்தித் திணைக்களம் (2) இனது மேந்தலை உறிஞ்சுதல் வீதம் இயந்திர மணித்தியால அடிப்படையாகும்.
- காலணிகள் ஒவ்வொன்றும் விற்பனை விலையில் 20% இலாபம் பெறத்தக்கவாறு விலை தீர்மானித்தல்.

தேவைப்படுவன :-

1. முதலாம் கட்டப் பகிர்வு அட்டவணை
2. இரண்டாம் கட்டப் பகிர்வு அட்டவணை
3. உற்பத்தித் திணைக்களம் ஒவ்வொன்றுக்குமான உறிஞ்சுதல் வீதம்
4. ஒவ்வொரு வகைக் காலணிகளினதும் உற்பத்திக் கிரயம்.
5. ஒவ்வொரு வகைக் காலணிகளினதும் விற்பனை விலை.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03) (அ) நிலாந்தன் நிறுவனத்தின் 2015 டிசம்பர் மாதத்திற்கான கடன்பட்டோர் பேரேட்டுக் கணக்குகள் கீழே தரப்பட்டுள்ளன.

கமல் கணக்கு

மீதி	12 000	காசு	42 000
விற்பனை	60 000	உட்திரும்பல்	5 000
வட்டி விதிப்பு	1 200	கழிவு	4 000
		மீதி/செ	22 200
	73 200		73 200
மீ/வ	22 200		

மதன் கணக்கு

மீதி	10 000	காசு	25 000
விற்பனை	20 000	மீ/செ	5 000
	30 000		30 000
மீ/வ	5 000		

ரமணன் கணக்கு

மீதி/செ	3 500	காசு	3 500
		மீதி/வ	3 500

விமல் கணக்கு

விற்பனை	30 000	மீதி	3 000
		காசு	18 000
		கழிவு	2 000
		மீதி/செ	7 000
	30 000		30 000
மீ/வ	7 000		

நந்தினி கணக்கு

விற்பனை	20 000	உட்திரும்பல்	3 000
ம.காசோலை	15 000	காசு	13 000
		அ.வி.மு.க	4000
		மீதி/செ	15 000
	35 000		35 000
மீ/வ	15 000		

2015.12.01 இல் கடன்பட்டோர் பேரேட்டுக் கணக்குகளின் பட்டியல் மீதியானது 2015.12.01 இல் உள்ள கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் இணங்கி இருந்தது. எனினும் இவ்விரண்டு மீதிகளும் 2015.12.31 இல் இணங்கவில்லை. இதற்கான பரிசீலனையில் பின்வரும் பிழைகள் அறியப்பட்டன.

1. கடன்பட்டோர் கபில் மீது விதிக்கப்பட்ட வட்டி ரூபா 200 கபில் கணக்கில் பிழையாகப் பதியப்பட்டுள்ளது.
2. நந்தினி கணக்கில் பதிவழித்த அறவிடமுடியாக்கடன் ரூபா 400 நந்தினி கணக்கில் ரூபா ரூபா 4000 எனப் பதியப்பட்டிருந்தது.
3. விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகை ரூபா 5,000 கூடுதலாகக் கூட்டப்பட்டு இருந்தது.
4. கடந்த மாதம் கடன்பட்டோர் ரமணன் கணக்கு தொடர்பாக பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக்கடன் ரூபா 3500 டிசம்பர் மாதம் மீளப் பெறப்பட்டமை கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டு இருந்தது. எனினும் ரமணன் கணக்கில் காசுப் பெறுவனவு மாத்திரம் பதியப்பட்டு இருந்தது.
5. மதன் கணக்கில் விற்பனைகள் விற்ற பொருட்களின் பட்டியல் விலையில் பதியப்பட்டு இருந்தது. இதில் 5% வியாபாரக் கழிவு கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும் முதன்மையேட்டில் சரியாகப் பதியப்பட்டிருந்தது.
6. மறுத்த காசோலை ரூபா 15,000 கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டு இருக்கவில்லை.
7. மாத இறுதியில் உள்ள கடன்பட்டோர் மீதியில் 10% இனை ஏற்பாடு செய்வது கம்பனியின் கொள்கையாகும். அறவிடமுடியாக் கடன் தொடர்பான அனைத்துப் பதிவுகளும் ஏற்பாட்டுக் கணக்கினூடாகப்பதிவழிப்புச் செய்யப்படும்.

வேண்டப்படுவன :

1) திருத்த முன் கடன்பட்டோர் பட்டியல் மீதி, திருத்திய பட்டியல் மீதி
2) தவறுகள் திருத்த முன்னர் நிலாந்தன் நிறுவனத்தில் பதியப்பட்ட கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
3) வழுக்கள் திருத்திய பின்னர் கட்டுப்பாட்டுக் கணக்கு
4) அறவிடமுடியா ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு

(10 புள்ளிகள்)

(ஆ) கோபி நிறுவனமானது வரையறுக்கப்பட்ட அப்துல் மோட்டார் கம்பனியிடமிருந்து ரூபா 300,000 பெறுமதியான மோட்டார் கார் ஒன்றினைக் குத்தகை அடிப்படையில் ஆரம்பக் கட்டணமாக ரூபா 100,000 செலுத்தி 01.01.2016 இல் கொள்வனவு செய்தது. எஞ்சிய தொகையானது ஐந்து வருடங்களில் பின்வருமாறு செலுத்தப்படல் வேண்டும்.

ஆண்டு	முதல்	வட்டித்தொகை
2016	40,000	12,000
2017	40,000	10,000
2018	40,000	8,000
2019	40,000	6,000
2020	40,000	4,000

இந்நிறுவனமானது மோட்டார் கார்களுக்கு 10% நேர்கோட்டுமுறையில் பெறுமானத் தேய்விடுகிறது.

வேண்டப்படுவன :
31.12.2016 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மேற்படி மோட்டார் கார் சம்பந்தமான பின்வரும் தகவல்களைக் கணிக்குக.
வருமானக் கூற்றில்

1) மோட்டார் கார் பெறுமானத்தேய்வு
2) மோட்டார் கார் குத்தகை வட்டி

நிதிநிலைமைக்கூற்றில்

3) நடைமுறையல்லாத சொத்தில் மோட்டார் கார்
4) நடைமுறையல்லாத பொறுப்பில் மோட்டார் குத்தகையாளன்
5) நடைமுறைப் பொறுப்பில் மோட்டார் குத்தகையாளன்

(5 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

04) 01.06.2016 டினோ ரூபா 200,000 ஐ காசாக முதலிட்டு சில்லறை வியாபாரத்தை ஆரம்பித்தார். மேலும் இத்தினத்தில் அவர் வணிகத்தின் பாவனைக்காக ரூபா 120,000 பெறுமதியான அலுவலக உபகரணங்களைக் கொண்டு வந்தார். அவர் வியாபாரத்தின் பெயரில் வங்கிக் கணக்கொன்றை ஆரம்பித்து எல்லாக் காசுக் கொடுக்கல் வாங்கல்களையும் இவ் வங்கிக் கணக்கினூடாகவே மேற்கொண்டார். முதல் மாத வியாபாரச் செயற்பாட்டினால் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ஏற்பட்டன.

கொடுக்கல் வாங்கல்கள் இல	கொடுக்கல் வாங்கல்
01	ரூபா 100,000 இற்குக் காசுக்குப் பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
02	ரூபா 80,000 கிரயம் கொண்ட பண்டங்கள் ரூபா 120,000 இற்குக் காசுக்கு விற்பனை செய்யப்பட்டன.
03	ரூபா 200,000 இற்குப் பண்டங்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன.
04	ரூபா 40,000 பெறுமதியான பண்டங்கள் மாதிரிக்கு ஒவ்வாமையினால் வழங்குனருக்குத் திருப்பி அனுப்பப்பட்டன.
05	15.06.2016 இல் மோட்டார் வான் ஒன்று ரூபா 300,000 இற்குக் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. இத்தொகை 24 மாதங்களுள் செலுத்தப்படல் வேண்டும்.
06	ரூபா 120,000 கிரயமுள்ள பண்டங்கள் ரூபா 150,000 இற்குக் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன.
07	அலுவலக ஊழியருக்கு ரூபா 10,000 மாதச் சம்பளம் செலுத்தப்பட்டது.
08	டினோ தனது சொந்தத் தேவைக்காக வணிகத்திடம் இருந்து ரூபா 40,000 ஐப் பெற்றுக் கொண்டார்.
09	வியாபார வழங்குனருக்குச் செலுத்த வேண்டிய மீதிகள் 10% கழிவுடன் தீர்க்கப்பட்டது.
10	கடன்பட்டோரிடமிருந்து வருமதியான தொகைள் 10% கழிவு அனுமதிக்கப்பட்டு மிகுதிப் பணம் பெறப்பட்டது.

மேலதிக தகவல்கள்

- ✶ 2016 யூன் மாதத்திற்குரிய ரூபா 5000 தொகைக்கான வணிகத்தின் மின்சாரப் பட்டியல் 05.07.2016 இல் பெறப்பட்டது.
- ✶ வணிகத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு நேர்கோட்டு முறையில் கிரயத்தில் 20% வருடாந்தம் பெறுமானத் தேய்விடல் வேண்டும்.

வேண்டப்படுவது :-

(1) இல 01 இலிருந்து 10 வரையான மேற்படி கொடுக்கல் வாங்கல்களின் விளைவுகளை (பெறுமதியுடன்) கணக்கீட்டுச் சமன்பாட்டினைப் பயன்படுத்திக் காட்டுவதுடன், ஒவ்வொரு பெறுமதியும் அதிகரிப்பின் (+) எனவும் குறைவடைவின் (−) எனவும் அதன் எதிரே குறிப்பிடுக. (இதற்காகப் பின்வரும் மாதிரி அமைப்பினைப் பயன்படுத்துக)

கொடுக்கல் வாங்கல் இல	சொத்துக்கள்				பொறுப்புக்கள்		உரிமை யாண்மை
	ஆதனம், பொறி, உபகரணம்	இருப்புக்கள்	வியாபார வருமதிகள்	வங்கி/ காசு	வியாபார சென்மதிகள்	கடன்கள்	
01							
02							

(2) 30.06.2016 இல் முடிவடைந்த மாதத்திற்கான வருமானக்கூற்று

(3) கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்தி 30.06.2016 இல் உள்ளவாறான உரிமையாண்மையின் உள்ளடக்கம்.

	ரூபா
ஆரம்ப மூலதனம்	
மாதத்திற்கான இலாபம் / நட்டம்	
(−) பற்றுக்கள்	
30.06.2016 இல் உள்ளவாறான உரிமையாண்மை	

(15 புள்ளிகள்)

05) (அ) உற்பத்தி நிறுவனம் ஒன்றிலிருந்து மே 2016 மாதத்தில் எடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு

உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் 1200

ஓரலகு உற்பத்திக்கு எடுக்கும் நேரம் 15 நிமிடங்கள்

ஊழியர்கள் உற்பத்தி செய்த அலகுகளின் எண்ணிக்கை

அமல்	400
கமல்	200
முகுந்தன்	400
விமலா	200

1) மணித்தியாலம் ஒன்றுக்கான கூலி 100/=
2) ஒவ்வொரு 100 அலகு உற்பத்திக்கும் 2000/= மேலதிக படியாக வழங்கப்படும்.
3) ஊழியர் ஒவ்வொருவரிடமும் இருந்தும் வருடாந்த நலன்புரிச் சங்கக் கட்டணம் 1200 ரூபா மாதாந்த சம தவணைக் கட்டணத்தில் அறவீடு செய்யப்படும்.
4) ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பு மொத்த சம்பளத்தில் தொழில் தருநர், ஊழியர் முறையே 15%, 10% ஆகும்.

வேண்டப்படுவது,

1) மே மாதத்திற்கான சம்பளப் பட்டியலையும், சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கினையும் தருக.
2) EPF கணக்கு
3) உற்பத்தி நிறுவனத்தின் மொத்த ஊழிய கிரயம் யாது?

(5 புள்ளிகள்)

(ஆ) வரையறுத்த முஹமட் கம்பனி புதிய இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கான மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்வதற்காகப் பின்வரும் தகவல்களைக் கொண்டுள்ளது.

இயந்திரத்தின் கிரயம்	700,000
நிர்மாணச் செலவுகள்	50,000
மூன்றாம் வருட இறுதியில் எச்சப் பெறுமதி	100,000
விற்பனை வருமானத்தின் வருடாந்த அதிகரிப்பு	450,000
செயற்பாட்டு கிரயத்தின் வருடாந்த அதிகரிப்பு	150,000

இயந்திரத்தின் ஆயுட்காலம் 3 வருடங்கள் என எதிர்பார்க்கப்படுவதுடன் 10% கழிவீட்டு காரணிகளாக

0	1.00
1	0.91
2	0.83
3	0.75 காணப்படுகின்றது.

வேண்டப்படுவது

1) 10% கழிவீட்டு வீதத்தில் ஆரம்ப முதலீட்டின் நிகழ்கால பெறுமதி.
2) முதலாம் வருடத்தில் ஏற்படும் தேறிய காசுப் பாய்ச்சல்.
3) மூன்றாம் வருடத்தில் காசு உட்பாய்ச்சல்களும் வெளிப்பாய்ச்சல்களும்
4) 10% கழிவீட்டு வீதத்தில் முதலீட்டின் நிகழ்காலப் பெறுமதி
5) 10% கழிவீட்டு வீதத்தில் முதலீட்டின் சாத்திய தன்மை

(5 புள்ளிகள்)

(இ) ஒரே தொழிலில் ஈடுபட்டுள்ள இரண்டு கம்பனிகளின் நிதியறிக்கைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு

1) வருமானக் கூற்று உருப்படிகள்

	X கம்பனி (ரூபா '000')	Y கம்பனி (ரூபா '000')
விற்பனை	5,600	8,400
விற்பனைக் கிரயம்	4,000	5,600
செயற்பாட்டுச் செலவு	600	400
வட்டி	40	80
வருமான வரி	460	1,120

2) நிதிநிலைமைக்கூற்று உருப்படிகள்

பொறி உபகரணங்கள்	6,250	5,600
கடன்பட்டோர்	1,120	2,100
கடன்கொடுநர்	3,100	5,000
8% தொகுதிக்கடன்	500	1,000
கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்	3,000	5,000
நிறுத்தி வைத்த வருவாய்	1,000	1,000

வேண்டப்படுவது :-

1. உரிமை மூலதனம் மீதான திரும்பல் விகிதம்
2. கடன்பட்டோர் புரள்வு விகிதம் (எல்லா விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன)
3. கடன் உரிமையாண்மை விகிதம்
4. வட்டி காப்பு விகிதம்
5. தேறிய இலாப விகிதம்

(5 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

06) (அ) கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காகத் தனித்தனி ஒவ்வோர் கணக்குகளையும் தயாரிக்குக.

விபரம்	காசு/ வங்கி	01.01.2015ல் அட்டுறு	01.01.2015ல் முற்பணம்	31.12.2015ல் அட்டுறு	31.12.2015ல் முற்பணம்	முடிவு கணக்கு
வெளிச்சுமைகூலி	?	1,600	300	1,200	800	6,000
வாடகை	4,500	?	750	1,150	350	4,000
மின்சாரம்	2,150	175	?	இல்லை	250	2,300
சம்பளம்	9,000	2,250	1,500	?	600	8,400
பெற்றதரகு	1,700	200	150	250	?	1,800
முதலீட்டு வருமானம்	4,000	500	400	600	300	?

(6 புள்ளிகள்)

(ஆ) விளையாட்டரங்கொன்றினை நடாத்திச் செல்லும் "ஸ்ரார்" இளைஞர் கழகத்தின் 2015.03.31 இல் சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வருமாறு,

	(ரூ '000')	(ரூ '000')
நடைமுறையல்லாச் சொத்துக்கள் :		
விளையாட்டரங்கு	500	
உடற்பயிற்சி உபகரணங்கள்	800	1,300
நடைமுறைச் சொத்துக்கள் :		
நிலுவை சந்தாக் கட்டணம்	50	
வங்கி மீதி	125	
காசு	40	215
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் :		
ஆயுள் சந்தா	500	
உடற்பயிற்சி உபகரண நிதி	300	800
நடைமுறைப் பொறுப்பு :		
முற்பணச் சந்தாக் கட்டணம்	125	
முற்பணங்கள் (உடற்பயிற்சிக்கான)	40	165

2016.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான தகவல்கள் பின்வருமாறு

i) சகல பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் காசு மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

ii) வருட சந்தாக் கட்டணத்தொகை ரூபா 5,000 என்பதுடன், அங்கத்தவர்கள் 100 பேர் காணப்படுகின்றனர். அத்துடன் ரூபா 10,000 வீதம் ஆயுள் சந்தா செலுத்திய 50 அங்கத்தவர்களும் உள்ளனர். ஆயுள் சந்தாவில் 10% த்தை வருடாந்த சந்தா வருமானமாகக் கருதுவது நிறுவனத்தின் கொள்கையாகும்.

iii) வருடத்தினுள் கிடைக்கப் பெற்ற சந்தாக் கட்டணம் ரூபா 425,000 ஆகும். இத்தொகையினுள் கடந்த வருட நிலுவை சந்தாக் கட்டணப் பெறுவனவும், எதிர்வரும் வருடத்திற்குச் சந்தாக் கட்டணம் செலுத்திய 20 அங்கத்தவர்களினது சந்தாத் தொகையும் உள்ளடங்கியுள்ளது. வருட இறுதியில் 20 அங்கத்தவர்கள் இவ் வருடத்திற்கான அங்கத்துவ சந்தாக் கட்டணத்தை செலுத்தியிருக்கவில்லை.

iv) அங்கத்தவர் தவிர்ந்த வெளி நபர்கள் நாளாந்தக் கட்டணம் ரூபா 200 செலுத்தி உடற்பயிற்சி பெறுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. 52 நாட்களினுள் 50 பேர் உடற்பயிற்சி வசதிகளைப் பெற்றுக்கொண்டு ரூ 550,000 செலுத்தியுள்ளதுடன், மேலதிகமாகக் கிடைக்கப்பெற்ற தொகையானது எதிர்வரும் வருடத்திற்கான முற்பணத் தொகையாகும்.

v) உடற்பயிற்சி உபகரணங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் ஊழியருக்கு மாதாந்தம் சம்பளமாக ரூபா 10,000 செலுத்தப்படுகின்றது.

vi) வருடத்தினுள் விளம்பரத்திற்காக ரூபா 80,000 மும், ஏனைய செலவுகளுக்காக ரூபா 250,000 மும் செலுத்தப்பட்டுள்ளது.

vii) விளையாட்டரங்கு, உடற்பயிற்சி உபகரணங்கள் வருடாந்தம் முறையே 5% ம், 20% தில் ஒடுங்கு பாகமுறையில் தேய்விடப்படல் வேண்டும்.

viii) விளையாட்டரங்கு அமைந்துள்ள கட்டடத்தின் ஒரு பகுதி மேசைப்பந்து விளையாட்டிற்காக வெளிநபரொருவருக்கு மாதாந்தம் ரூபா 10,000 திற்கு 2015.04.01 இல் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர் 18 மாதங்களிற்கான வாடகையைச் செலுத்தியுள்ளார்.

ix) வருட இறுதியில் ரூபா 50,000 த்தை மீதியாக வைத்துக்கொண்டு எஞ்சிய சகல காசும் வங்கியிலிடப்பட்டது.

x) வருடத்தினுள் உபகரணப் பராமரிப்புக்காக ரூபா 75,000 செலவிடப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது :

1) 2015.03.31 ஆந் திகதிக்கான திரண்ட நிதிக்கணக்கு

2) 2016.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான வருமான செலவுக் கணக்கு

3) 2016.03.31 உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று

(9 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

07) (அ) வரையறுக்கப்பட்ட மலிங்க கம்பனியின் 2016.03.31 ல் முடிவடைந்த வருடத்திற்கான பொழிப்பாக்கப்பட்ட வருமானக் கூற்றினதும் உரிமை மாற்றல் கூற்றினதும் உருப்படிகள் பின்வருமாறு

வருமானக்கூற்று	(ரூபா 000)
விற்பனைகள்	20,500
விற்பனைக் கிரயம்	(14,000)
மொத்த இலாபம்	6,500
ஏனைய வருமானங்கள் (நிலையான வைப்பு வட்டி)	75
செயற்பாட்டுச் செலவுகள்	(3,500)
ஏனைய செலவுகள் (கணினி விற்பனை நட்டம்)	(50)
நிதிச் செலவுகள் (கடன் வட்டி)	(760)
வரிக்கு முன் இலாபம்	2,265
வருமான வரி	(1,200)
நிதியாண்டுக்கான இலாபம்	1,065

2016.03.31 ல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமை மாற்றல் கூற்று

(ரூபா 000)

விபரம்	நிறுத்தி வைத்த உழைப்பு
2015.04.01 மீதி	540
மொத்த விரிவான வருமானம்	1,065
பங்கிலாபம்	(605)
2016.03.31 நிறுத்தி வைத்த உழைப்பின் மீதி	1,000

மேலதிக தகவல்கள்

1. விற்பனை செய்த கணினியின் தேறிய பெறுமதி 120,000 ஆகும்.
2. செயற்பாட்டுச் செலவினுள் உள்ளடக்கப்பட்ட பெறுமானத் தேய்வின் பெறுமதி ரூபா 300,000 ஆகும்.
3. நிதி நிலைமைக் கூற்றிலிருந்தும் எடுக்கப்பட்ட மீதிகள் பின்வருமாறு

(ரூபா 000)

	2016.03.31	2015.03.31
சாதாரண பங்கு மூலதனம்	15,500	15,000
முன்னுரிமைப் பங்குகள்	10,000	10,000
ஆதனம் பொறி மற்றும் உபகரணம்	7,700	8,000
காசும் காசுக்குச் சமனானவையும்	1,440	300
பெற வேண்டிய வட்டி	40	50
ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்	3,200	2,900
வருமான வரி ஒதுக்கம்	150	100
முன்மொழியப்பட்ட பங்கிலாபம்	200	250
அட்டுறு கடன் வட்டி	120	60
ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள்	860	750

4. வருடத்தில் ஆதனம் பொறி மற்றும் உபகரணத்திற்கான மீள் மதிப்பீடு இடம்பெறவில்லை. அத்துடன் 2016.03.31 ல் பிரதியெடுத்தல் இயந்திரமொன்றும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது :

1. இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இற்கமைய காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்க. (செயற்பாட்டு நடவடிக்கைகளை நேரில் முறையில் முன்வைக்கவும்)

(8 புள்ளிகள்)

(இ) கலைவாணி கல்வி நிறுவனமானது மாணவர்களுக்கு இரு நாட்களைக் கொண்ட செயலமர்வொன்றை நடாத்துவதற்கு உத்தேசிக்கின்றது. இதில் மாணவர்கள் 200 பேர் வரை பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு மாணவனிடமிருந்து இரு நாள் செயலமர்வுக்குமாக ரூபா 1,000 அறவிடப்படுவதுடன் இதற்காக மதிப்பிடப்பட்ட செலவுகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

	ரூபா
நாளொன்றுக்கு தேநீர், பகலுணவு	100
கோவை அட்டைகள் இரு நாட்களுக்கும்	40
இறுவெட்டு (CD) இரு நாட்களுக்கும்	60
மண்டப வாடகை ஒரு நாளைக்கு	15,000

- இரு நாள் செயலமர்விற்கும் செலவாகுமென எதிர்பார்க்கப்படும் செலவுகளின் விபரம் பின்வருமாறு

	ரூபா
மின்சாரம், குளிரூட்டல் செலவு	8,000
மண்டப ஒழுங்கமைப்புச் செலவு	3,000
ஒலி பெருக்கி இயந்திரம்	4,000
விரிவுரையாளர் கட்டணம்	60,000

வேண்டப்படுவது :

1. இச்செயலமர்விற்கான உத்தேச மதிப்பிடப்பட்ட செலவுகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பங்கு பற்றச் செய்ய வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையைக் கணிக்க.
2. உத்தேசிக்கப்பட்டவாறு இருநாள் செயலமர்விற்கும் 200 மாணவர்களும் காசு செலுத்திப் பங்குபற்றினால் உழைக்கக் கூடிய இலாபத்தைக் கணிக்க.
3. கலைவாணி கல்வி நிறுவனம் ரூபா 56,000 ஐ இலாபம் உழைக்க எதிர்பார்ப்பின் இச்செயலமர்வில் பங்குபற்றச் செய்ய வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையைக் கணிக்க.
4. உத்தேசிக்கப்பட்ட தொகையினை விட 50 மாணவர்கள் மேலதிகமாகக் கலந்து கொண்டால் உத்தேச இலாபத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்பினைக் கணிக்க.

(7 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)